# பிரட்ரிக் நீட்சேயின் ஒழுக்கம் பற்றிய நோக்கும் பௌத்த சமய ஒழுக்க சிந்தனைகளும் – ஓர் ஒப்பீட்டு விமர்சனப் பகுப்பாய்வு

**அ. திவிசாளினி**

*மெய்யியல் துறை, பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை*

thivithivi024@gmail.com

**ஆய்வு அறிமுகம்**

மனித சமுதாயத்தின் வளர்ச்சி ஒழுக்கச் சிந்தனைகளுடன் இணைந்தே முன்னேறியுள்ளது. எது நன்மை? எது நியாயம்? எது அநியாயம்? போன்ற அடிப்படைக் கேள்விகளுக்கு விடை காண உலக மெய்யியல் மரபுகள் பல வழிகளை முன்வைத்துள்ளன. இவை உலக எல்லைகளைக் கடந்த நிலையில் தமது கருத்துக்களை வெளியிடும் அதேவேளை மேற்கத்தேய சிந்தனையாளர்கள் கீழைத்தேய சிந்தனைகளை உள்வாங்கியும் கீழைத்தேய சிந்தளைகள் பல மேற்கத்தேய சிந்தனைப் பிரதிபலிப்புக்களுடனும் செயற்பட்டுள்ளமையை அவதானிக்க முடிகின்றது. ஒழுக்கச் சிந்தனைகள் சில சமயங்களில் மதத்தின் அடிப்படையிலும் சில சமயங்களில் மனித இயல்புகள் மற்றும் அதிகார உறவுகளின் அடிப்படையிலும் உருவாகியுள்ளன. இத்தகைய எடுத்துக்காட்டுக்களில் மிகவும் தாக்கம் செலுத்திய இரண்டு மெய்யியல் போக்குகளாக ஜேர்மன் மெய்யியலாளர் பிரட்ரிக் நீட்சே உருவாக்கிய ஒழுக்கக் கருத்துக்கள் மற்றும் கிழக்கு ஆன்மீக மெய்யியல் மரபான பௌத்த சமயத்தின் ஒழுக்கக் சிந்தனைகள் காணப்படுகின்றன.

மேற்கத்தேய நவீன தனிமனித சிந்தனைக்கும் கிழக்கு ஆன்மீக ஒழுக்க மறுமலர்ச்சிக்கும் இடையே இவ்விரு மெய்யியல் சிந்தனைகள் ஒரு கலாசார எல்லையைக் கடந்த புலனாய்வு மேடையை உருவாக்குகின்றன. ஆகவே நீட்சேயின் விமர்சனத் தன்மையும் பௌத்த ஒழுக்கத்தின் ஆன்மீகப் பரிமாணமும் இணைந்து ஆராயப்பட வேண்டிய அவசியம் உள்ளது.

நீட்சேயின் மெய்யியல் கருத்துக்கள் பல்வேறு வகையான உலகக் கண்ணோட்டங்களை கொண்டமைந்ததாகக் காணப்படுகின்றன. அந்தவகையில் நீட்சேயின் செல்வாக்கு மெய்யியலுக்கு உள்ளேயும் வெளியேயும் குறிப்பிடத்தக்க அளவில் இருந்துவருகின்றது. அந்தவகையில் சமயம் பற்றிய மெய்யியல் நோக்கில் நீட்சேயின் பார்வை முக்கியம் பெறுகின்றது. சமயம் தொடர்பான நீட்சேயின் எண்ணப்பாட்டினை சுயாதீன சித்தம், அதீத மனிதன், ஒழுக்கம், கடவுள் பற்றிய நோக்கு எனப் பல பிரிவுகளின் ஊடாக அறியமுடியும்.

சமயம் என்பது மனிதனுக்கு நன்மையை பயக்கவல்ல வழியைக் காட்டுகின்ற நெறி ஆகும். ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு மதம் இருக்கும் போது அம் மதம் அவன் வாழ்நாளில் உபயோகமான நன்மைகளைச் செய்யக்கூடியதாயிருத்தல் வேண்டும். உலகளாவிய ரீதியில் சமயக் கொள்கைகளும் சமயம் தொடர்பான நம்பிக்கைகளும் மக்கள் மத்தியில் பெரும் தாக்கம் செலுத்திய வகையில் காணப்படுகின்றது. சமயங்கள் மனிதனை நல்வழிப்படுத்துகின்றன எனக் குறிப்பிட்டாலும் அவ்

நல்வழிப்படுத்தல் கருத்துக்கள் மதத்திற்கு மதம் வேறுபடுகின்றன. சமயங்கள் மனிதர்களை நல்வழிப்படுத்துகின்றன, சிந்திக்கத் தூண்டுகின்றன, சுதந்திரமாக செயற்பட அனுமதிக்கின்றன என ஒரு சிலர் தமது கருத்துக்களை முன்வைக்கின்ற வேளையிலும் கூட பல மெய்யியலாளர்கள் சமயங்கள் மனிதர்களை அடிமைப்படுத்துகின்றன தனித்து செயற்பட அனுமதிக்கவில்லை சமயம் ஒரு போதை என தமது கருத்துக்களை தெரிவித்து தனிமனித சுதந்திரத்தை வலியுறுத்தி நிற்கின்றனர்.

அந்தவகையில் நீட்சே மிகச் சிறந்த உதாரணம் ஆவார். ஐரோப்பாவின் பெரிய மயக்க மருந்துகளில் ஒன்றாக நீட்சே கிறிஸ்தவத்தினை குறிப்பிடுகின்றார். நீட்சே மெய்யியல் தொடர்பாக பல கருத்துக்களை தெரிவித்திருந்தாலும் கூட சமயம் தொடர்பாக தனது அதீத கவனத்தைச் செலுத்தியுள்ளார். மனித இனம் வலிமையற்றுக் காணப்படுவதற்கு என்ன காரணம் என தேட முற்பட்ட நீட்சே, மக்கள் அஞ்சும் போது அவர்களுக்கு அவ்வாறான அச்சத்தைக் களைந்து பகுத்தறிவை ஏற்படுத்தக் கூடிய சமயங்கள், அதைவிடுத்து அவனை அறியாமையில் வழிநடத்தி கொண்டிருப்பதைக் கண்டு ஆத்திரமடைந்தார். பௌத்த சமயம் மக்களை நல்வழிப்படுத்தக் கூடிய வகையில் போதனைகளையும் வழிகாட்டல்களையும் அளிக்கின்றன. நீட்சேயின் ஒழுக்க சிந்தனைகளை பௌத்த சமயத்தின் ஒழுக்க சிந்தனைகளுடன் ஒப்பிட்டு ஆரய்வதனையே இந்த ஆய்வானது பின்னணியாக கொண்டுள்ளது. இவற்றின் ஊடாக இரு கலாசாரங்களுக்கு உட்பட்ட இரு கருபொருட்களை மையமாகக் கொண்டு கலாசாரம் கடந்த பிரதிபலிப்புக்களை இங்கு ஒழுக்கம் என்ற அடிப்படையில் ஆராய்வதனை நோக்கமாக கொண்டுள்ளேன்.

நீட்சேயின் நவீன மேற்கத்தேய தனிமனித ஒழுக்கக் கருத்துக்களையும் பௌத்தத்தின் கீழைத்தேய ஆன்மீக ஒழுக்கச் சிந்தனைகளையும் ஒப்பிட்டு விமர்சன ரீதியாகப் பகுப்பாய்வு செய்வதன் மூலம் இந்த ஆய்வு கலாசார எல்லைகள் மெய்யியல், அணுகு முறைகள் மற்றும் துறைகள் ஆகியவற்றைத் தாண்டும் ஓர் ஆழமான புலனாய்வாக அமைகின்றது.

**ஆய்வுப் பிரச்சினை**

நீட்சே வலியுறுத்தும் ஒழுக்கம் பற்றிய நோக்குகள் மற்றும் பௌத்த சமயம் வலியுறுத்தும் ஒழுக்கம் பற்றிய சிந்தனைகள் என்பவற்றுக்கும் இடையிலான தொடர்புகள் எவ்வாறு உள்ளது என்பதனை ஒப்பீட்டு ரீதியாக ஆராய்தல். நீட்சேயின் அதீத மனிதன் மற்றும் பௌத்தத்தின் புத்தர் நிலை ஆகியவை கருத்து ரீதியில் எவ்வாறு பாரக்கப்படுகின்றன என்பதை அறிதல்.

**இலக்கிய மீளாய்வு**

நீட்சேயினைப் பற்றிப் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் நீட்சேயின் ஒழுக்கம் பற்றிய நோக்குகளினையும் பௌத்த சமய ஒழுக்கச் சிந்தனைகளையும் ஒப்பீட்டு நோக்கிய ஆய்வுகள் இது வரை எவராலும் முன்வைக்கப்படவில்லை. இவ்வாறு தோற்றம் பெறும் இவ்வாய்வானது மெய்யியல் துறைசார் ஆய்வுகளின் ஆய்வு இடைவெளியை பூர்த்தி செய்யும் ஒன்றாக அமையும்.

ஆய்வாளர்கள் தங்களது ஆய்வுகளை வலுப்படுத்துவதற்கும், நியாயப்படுத்துவதற்கும் வேறு ஆய்வாளர்களால் முன்வைக்கப்பட்ட ஆய்வு முடிவுகளை தழுவி தங்கள் ஆய்வில் பிரயோகப்படுத்துதல்

ஆய்வியல் துறையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயம் என்பதனை அடிப்படையாகக் கொண்டு நீட்சே தொடர்பாகவும் அவரது ஒழுக்கவியல் கருத்துக்கள் மற்றும் பௌத்த சமய ஒழுக்க சிந்தனைகள், சமயக்கொள்கைகள் தொடர்பாகவும் எழுதப்பட்ட ஆய்வுகள் அதன் தழுவல்களுக்கு உட்படுத்தப்பட்ட நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள், இணையக்கட்டுரைகள், இணையக் காணொளிகள் என்பவற்றைத் தெரிவு செய்து அவற்றில் தழுவல்களை மேற்கொண்டு இவ்வாய்வு சிறப்பாக மேற்கொண்டுள்ளது.

**ஆய்வு முன்னோடிகள்**

மைக்கல் டேனர், (2007), "நீட்சே மிகச் சுருக்கமான அறிமுகம்" எனும் நூலில் திருப்தியின்மைகளும், எஜமானர்களும், அடிமைகளும், நீட்சே பற்றிய அறிமுகம் போன்ற பல விடயங்களை உள்ளடக்கியுள்ளது. அதேபோல குப்புசாமி.இரா, (2009) "நீட்சே வாழ்க்கை வரலாறு" எனும் நூலில் நீட்சே பற்றிய அறிமுகத்தினையும் சமயக் கொள்கைகளுக்கெதிராக நீட்சேயின் கருத்துக்கள், ஒழுக்க கருத்துக்களை நீட்சே வலியுறுத்தும் விதம், சமயம் மக்களை அடிமைப்படுத்திய விதம் என்பவற்றைக் குறிப்பிட்டுள்ளார்.

குருகுலராஜாவின்(20005), "இலங்கைப் பண்பாடும் சமயங்களும்" மற்றும் சோமசுந்தரத்தின் (1995) மனித விழுமியங்கள் நூலின் மூலம் பௌத்த சமயத்தின் கொள்கைகள் கோட்பாடுகளின் ஊடாக ஒழுக்க கருத்துக்கள் புலப்படுத்தப்படும் விதம் மற்றம் சமய நோக்கு என்பவற்றை அறியமுடிகிறது. குமாரசாமியின் (2006) "பௌத்தம: ஒரு சமயம்" நூலானது புத்தரின் வழிமுறையானது மற்றவர்களின் வழிமுறைகளில் இருந்து எவ்வாறு மாறுபட்டது, தன்னைக் கண்டறிதல் எவ்வாறு? பௌத்தசமயம் எந்தளவிற்கு சிந்தனைச் சுதந்திரத்தினை அளிக்கின்றது, பௌத்த சமயம் ஒழுக்கம் சுதந்திரத்தையும், விளக்கத்தையும் எவ்வாறு அடிப்படையாக கொண்டுள்ளது எனும் பல விடயங்களை விளக்குகின்றது.

ஜமாஹீர்.பீ.எம், (2012) "ஒழுக்கவியல் ஒரு அறிமுகம்" எனும் நூலில் ஒழக்கவியல் என்றால் என்ன? ஒழுக்கவியல் பற்றிய பல மெய்யியலாளர்களின் கருத்துக்கள், சமயங்களின் ஒழுக்கம் என இவ் ஆய்விற்கு அவசியமான பல விடயங்களை உசாவ முடிந்தது. அதேபோல அருணன், (2007) "புத்தர் தருமமும் சங்கமும்" எனும் நூலில் புத்தருக்கு முன் சமயம் எவ்வாறு நோக்கப்பட்டது, புத்தரின் காலத்திலே சமயம் எவ்வாறு வளர்த்தெடுக்கப்பட்டுள்ளது, பௌத்த சமயம் வலியுறுத்தும் ஒழுக்க அறநெறி கருத்துக்கள் எவை? பௌத்த சமயம் வலியுறுத்தும் கடவுள் – ஆத்மா மறுப்பு, நிர்வாணமும் மறுபிறப்பும் என்பன எவற்றை வலியுறுத்தி நிற்கின்றன போன்ற பல கருத்துக்களைத் தருகின்றது. இதனைவிட ஆய்வுக்ட்டுரைகள், காணொளிகளும்

**ஆய்வு இடைவெளி**

நீட்சேயினைப் பற்றி பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் நீட்சேயினது ஒழுக்க சிந்தனைகளை பௌத்த சமய ஒழுக்க சிந்தனைகளுடன் ஒப்பீட்டு நோக்கிய ஆய்வுகள் இதுவரை எவராலும் முன்வைக்கப்படவில்லை. கீழைத்தேயம் மற்றும் மேலைத்தேய மெய்யியலில் உள்ள ஒழுக்கம் பற்றிய சிந்தனைகளைத் தொடர்புபடுத்தி எவரும் ஆய்வுகளினை முன்வைக்கவில்லை என்பதனை இந்த ஆய்வுக்கான ஆய்வு இடைவெளியாக கொண்டு இவ் ஆய்வானது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

**ஆய்வின் கருதுகோள்**

நீட்சேயின் ஒழுக்கம் பற்றிய நோக்குகள் மற்றும் பௌத்த சமய ஒழுக்க சிந்தனைகள் என்பவற்றை ஒப்பீட்டு ஆராய்ந்து அவற்றுக்கிடையிலான தொடர்பு எவ்வாறு உள்ளது என்பதை அறிதல்.

**ஆய்வின் முக்கியத்துவம்**

நீட்சேயின் ஒழுக்க நோக்குகளையும் பௌத்த சமய ஒழுக்க சிந்தனைகளையும் ஆராய்ந்து ஒழுக்கம் பற்றிய சிந்தனைகள் தொடர்பாக பல விடயங்களை அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளமை இவ்வாய்வின் முக்கியத்துவம் ஆகும். மேலும் இவ் ஆய்வானது புதியதோர் ஆய்வாக காணப்படுகின்றமையானது இவ்வாய்வின் முக்கியத்துவமாகக் காணப்படுகின்றது. அத்தோடு கீழைத்தேயம் மற்றும் மேலைத்தேய மெய்யியலில் உள்ள ஒழுக்கம் பற்றிய சிந்தனைகளை தொடர்புபடுத்தி ஆராய்ந்துள்ளமையும் முக்கியத்துவத்தினையே புலப்படுத்துகின்றது. இவ்வாய்வானது கிழக்கு – மேற்கு மெய்யியல் சிந்தனைகளின் தொடர்பை வலுப்படுத்துகின்றது. அத்தோடு ஒழுக்கம் என்ற கருத்தின் பல்வேறு பரிமாணங்களை வெளிக்கொண்டு வருகின்றது. இதுமட்டுமன்றி நவீன உலகில் மதம், அதிகாரம், தனிமனிதம், கருணை ஆகியவற்றுக்கிடையிலான உறவைப் புரிந்து கொள்ள உதவுகின்றது.

**ஆய்வின் வரையறை**

நீட்சேயின் ஒழுக்க சிந்தனைகள் மற்றும் பௌத்த சமய ஒழுக்க சிந்தனைகள் என்பவற்றை ஒப்பிடுவதனை வரையறையாக கொண்டுள்ளது.

**ஆய்வு முறையியல்**

ஆய்வானது நீட்சேயின் ஒழுக்கம், பௌத்த சமய ஒழுக்கம் என்பவற்றை மையப்படுத்திய துல்லியமான மற்றும் ஆழமான கருத்துக்களைத் திரட்டுவதனை நோக்கமாக கொண்டுள்ளது. இவ் ஆய்வு முறையியலாக பண்புசார் ஆய்வு (Qualitative method) gயன்படுத்தப்படவுள்ளது. அந்த வகையிலே பண்புசார் ஆய்வு முறையியலை பயன்படுத்தியதன் ஊடாக ஆய்வு தொடர்பான ஆழமான விளக்கத்தினை நெகிழ்வான தரவு திரட்டல் முறையை பயன்படுத்தி பெற்றுக்கொள்ள முடிந்தது. மேலும் இவ் ஆய்வானது தொகுத்தறி மற்றும் விபரணப்பகுப்பாய்வு முறையியல்கள் மூலம் தர்க்க ரீதியாக ஆராயப்படவுள்ளது.இவை மட்டுமன்றி இவ்வாய்வானது பிரட்ரிக் நீட்சேயின் ஒழுக்கம் பற்றிய நோக்கும் பௌத்த சமய ஒழுக்க சிந்தனைகளும் – ஓர் ஒப்பீட்டு விமர்சன ஆய்வு என்ற தலைப்பின் அடிப்படையில் இவ்வாய்வானது ஒப்பீட்டாய்வு முறையியலில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் இவ்வாய்விற்கான தரவுகளும் தகவல்களும் முதலாம்இ இரண்டாம், மூன்றாம் நிலை தரவுகள் மூலம் சேகரிக்கப்பட்டுள்ளது.

**முடிவுரை**

நீட்சேயின் ஒழுக்கம் பற்றிய நோக்குகளுக்கும் பௌத்த சமய ஒழுக்க சிந்தனைகளுக்கும் இடையிலான தொடர்பு எவ்வாறு உள்ளது எனும் கருதுகோள் இவ்வாய்வின் ஊடாக விளக்கப்பட்டுள்ளது. மேலைத்தேய கலாசாரப் போக்கினை கொண்ட பிரட்ரிக் நீட்சேயினுடைய கொள்கைகளும் கீழைத்தேய கலாசாரப் போக்கினை உள்ளடக்கிய பௌத்த சமய ஒழுக்க சிந்தனைகளையும் ஒப்பிட்டு பௌத்த சமயம் வலியுறுத்தும் ஒழுக்கசிந்தனைகள் பல நீட்சேயின் மெய்யியல் சிந்தனைப் போக்குகளில் பாரிய தாக்கத்திற்கு உள்ளாக்கத்திற்கு

உள்ளாக்கப்பட்டுள்ளதோடு ஒழுக்கம் தொடர்பான எண்ணப்போக்குகள் பௌத்த சமயத்திலும் நீட்சேயினுடைய மெய்யியலிலும் கலாசாரப் பிரிவினை என்பதனையும் தாண்டி பிரதிபலிப்பிற்கு உள்ளாக்கப்பட்டுள்ளமையை அறியமுடிகின்றது.

**உசாத்துணைகள்**


Copleston, F. C. (1942). *Friedrich Nietzsche's superman and its religious implications.* Cambridge University Press.

IvyPanda. (2021). *Friedrich Nietzsche's relationship to religion.* https://ivypanda.com/essays/friedrich-nietzsches-relationship-to-religion/ (Accessed 04 August 2025)

Nietzsche, F. (1886). *Beyond good and evil.* CreateSpace Independent Publishing Platform.

Nietzsche, F. (1887). *On the genealogy of morals.* Vintage Books.

Nietzsche, F. (1974). *The gay science.* Vintage Books.

Remholf, J. (2017). *God is dead: Nietzsche and the death of God.* Old Dominion University. https://ivypanda.com/essays/god-is-dead-nietzsche-and-the-death-of-god/ (Accessed 22 July 2025)

அருணன், (2007). *புத்தர் தருமமும் சங்கமும்.* சென்னை, பாரதி புத்தகாலயம்.

குப்புசாமி, இரா, (2009). *நீட்சே வாழ்க்கை வரலாறு.* சென்னை, சபரி பிராஸஸ் பதிப்பகம்.

குலசேகர், கி. (2005). *நீட்சே சுருக்கமான வரலாறு.* சென்னை, விடியல் பதிப்பகம்.

தேவநாத், சி, எஸ். (1998). *உலக முக்கிய மதங்களும் அவைகள் சொல்லும் உண்மைகளும்.* சென்னை, நர்மதா பதிப்பகம்.